**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 489/2025**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பையா | தொழில் | : | பேராசிரியர் |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 15.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பேராசிரியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆறுமுகம் என்னுடைய உறவினர். எதிரியை எனக்கு தெரியாது. 2021 ம் வருடம், 10 வது மாதம் ஒருநாள் இரவு 07.00 மணிக்கு எஸ்.எம் பல்க்கிற்கு அருகில் நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தேன். அந்த பல்க்கிற்கு அருகில் ஆறுமுகம் படுத்து கிடந்தார். அவரது வாயில் நுரை தள்ளி கொண்டிருந்தது. நான் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை அளித்து அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு நான் தான் அழைத்து சென்றேன். ஆறுமுகத்தின் உறவினர்கள் வந்ததும் நான் ஊருக்கு கிளம்பி விட்டேன். நான்

ஆறுமுகத்திடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது, எதிரி ஆறுமுகத்திற்கு பணம் கொடுக்க வேண்டியிருந்தது என்றும், அதனால் சாராயத்தில் விஷம் கலந்து எதிரி கொடுத்ததாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 15:23:01 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 489/2025</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவம் ஆசாரி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 58 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 15.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 4 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 02.11.2021ம் தேதி, 17.30 மணிக்கு கடையநல்லூர் எஸ்எம் பல்க் அருகில் உள்ள ஆறுமுகம் பெட்டி

கடை அருகே வைத்து வைத்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், சீமான் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 15:23:09 +0530